Source: *Tamil Murasu*, p3
Date: 17 August 2018

# இயற்கைச்சூழலின் பலன்களை மதிப்பிட மூன்றாண்டுத் திட்டம்

சிங்கப்பூரின் இயற்கைச் சூழல் மூலம் கிடைக்கும் அனைத்துப் பலன்களையும் மதிப்பிட மூன்றாண்டு பெரும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நேற்றுத் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம், இயற்கைப் பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் இடையே நிலவும் போட்டியில் எதை விட்டுக்கொடுப்பது எதை எடுத்துக்கொள்வது என்பதைச் சொத்து மேம்பாட்டாளர்கள் தீர்மானிக்க முடியும்.

சிங்கப்பூரின் காடுகள், பூங்காக்கள், நீர்நிலைகள், கடல் வாழ் பகுதிகள் மூலம் பெறப்படும் பொருளியல், சமூகவியல், சுற்றுச்சூழல் பலன்களை இந்தத் திட்டம் முடிவு செய்யும். நாட்டின் "இயற்கை முதலீடு" பற்றி ஆராய மூன்றாண்டு காலமாகும்.

"பசுமையான நகருக்கான தேசிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தாலும் தேசிய அளவில் முழுமையான திட்டமிடலில் எவ்வாறு இயற்கையை இணைப்பது என்பது குறித்து நாம் இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது," என்று இந்தத் திட்டத்திற்கு தலைமை தாங்கும் அமைப்புகளில் ஒன்றான சிங்கப்பூர்–ஈடிஎச் சென்டரின் பேச்சாளர் கூறினார்.

எடுத்துக்காட்டாக, நிழலும் நீர் பதமும் தருவதன் மூலம் மரங்கள் நகரத்தின் வெப்பநிலையைக் குறைக்க முடியும். பருவநிலையில் மரங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தை எளிதாகக் கணக்கிட முடியும். ஆனால், மரங்களினால் ஏற்படும் மற்ற பயன்கள் பெரிய அளவில் தெரிவதில்லை.

மேலும், வெள்ள நீர் வேகமாக வடிந்தோடுவதை மரங்கள் தடுப்பதுடன் நிலம் அதிக மழைநீரை உள்வாங்கவும் உதவுகிறது.

இதனால், சிங்கப்பூரின் கால்வாய் கட்டமைப்பின் மீதான பளுவைக் குறைக்கிறது.

அத்துடன், உடல், மன ஆரோக்கியத்தில் ஆக்ககரமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெளிப்புற நடவடிக்கைகளை காடுகள் சாத்தியமாக்குகின்றன.

இத்திட்டத்திற்கு தலைமை தாங்கும் மற்றொரு அமைப்பு சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம். இந்த இரு அமைப்புகளும் கட்டட வரைகலைஞர்கள், உயிரியலாளர்கள், சுற்றுச்சூழலியலாளர்கள், பொருளியலாளர்கள், புவியியலாளர்கள், மென்பொருள் பொறியாளர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும்.

இந்தக் குழு, சிங்கப்பூரின் மிக முக்கியமான சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கான வரையறையை உருவாக்கும்.

அவற்றினால் ஏற்படக்கூடிய பலன்களைத் தீர் மானிப்பதுடன், அவற்றை அளவிடும் கருவிகள் குறித்தும் முடிவெடுக்கும்.

பின்னர் குழுவினர் சிங்கப்பூரின் தற்போதைய நிலம், கரையோரப் பகுதிகள், கடல்வாழ் பகுதிகள் ஆகியவற்றை ஆராய்வார்கள். அவற்றின் பொருளியல், சமூகவியல், சுற்றுச்சூழல் பலன்களை அளவிடுவார்கள்.

இந்தத் தகவல்களைக் கொண்டு திட்ட உருவாக்குநர்கள், மேம்பாட்டாளர்களுக்கான திட்டத்தை வடிவமைப்பார்கள்.

இதன்மூலம் "இயற்கை முதலீடு" மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளை அடையாளம் கண்டு, சிங்கப்பூரின் இயற்கை மூலத்தின் பல்வேறு காட்சிகளால் ஏற்படக்கூடிய தாக்கங்களை உருவகப்படுத்துவார்கள்.

இது, திட்ட உருவாக்குநர்கள், மேம்பாட்டாளர்கள், இயற்கைப் பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் இடையே எதை விட்டுக்கொடுப்பது எதை எடுத்துக்கொள்வது என்பதை ஆய்ந்தறிந்து முடிவெடுக்க உதவும். மேலும் நாட்டின் நகர வடிவமைப்பில் இயற்கையை வலுவாக ஒருங்கிணைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறியவும் உதவும் என்றார் சிங்கப்பூர்–ஈடிஎச் சென்டரின் பேச்சாளர்.

மேலும், இது இயற்கை வழங்கக்கூடிய பயன்கள் குறித்து ஆழமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் அதை வரவேற்கவும் தேவையான அறிவை வழங்கும் என்று பேராசிரியர் அட்ரினி கிரட்–ரிகமி கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.